**23.11.2022**

**OS.No. 55/2019 and OS.No.110/2020 PW : 1, திரு. பதம்சந்த் ஜெயின்**

**குறுக்கு விசாரணை...**

நான் ஊத்துக்கோட்டை நீதிமன்றத்தில் அ.வ.எண்.44/2018 என்று ஒரு வழக்கை தாக்கல் செய்தேன். நான் மட்டும் வாதியாக இருந்து இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது மட்டும் தாக்கல் செய்தேன். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அவ்வழக்கை தாக்கல் செய்தேன். ஷக்கிலா ரமேஷ் என்பவரிடமிருந்து சொத்தை நான் வாங்கியதாக கூறி அந்த வழக்கை தாக்கல் செய்தேன். அவருக்கு சொத்து எப்படி கிடைத்தது என்று கேட்டால் அவரது கணவரான ரமேஷ் ஷக்கிலாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். பெண்கள் பெயரில் ஆவணம் இருந்தால் பெட்ரோல் பங்க் நடத்த உரிமம் கொடுப்பார்கள். ஆனால் அந்த விவரம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. அவ்வழக்கில் கண்ட சொத்தின் சர்வே எண் 165/4ஏ ஆகும். அதன் விஸ்தீரனம் 1.16 ஏக்கர் ஆகும். இன்று ரமேஷ் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார். ரமேஷிற்கு சர்வே எண் 165/4ஏ எப்படி கிடைத்தது என்று கேட்டால் அவருடைய மூதாதையர்கள் சொத்துக்களை பரிவர்த்தனை செய்துகொண்ட வகையில் அந்த சர்வே எண் அவருக்கு கிடைத்தது. மாதவ நாயுடுவும், வீராசாமி நாயுடுவும் சொத்துக்களை பரிவர்த்தனை செய்து கொண்டார்கள். அது வாய்மொழியான பரிவர்த்தனை ஆகும். 1987ல் பரிமாறிக்கொண்டதாக அவ்வழக்கில் கூறியிருக்கிறேன். அவ்வழக்கு தான் இந்த நீதிமன்றத்திற்கு அவஎண் 110/2020 என்று மாறுதல்

ஆகிவிட்டது. அவ்விதம் பரிமாறிக்கொண்டது எனக்கு நேரடியாக தெரியததால் எந்த வருடம் என்று எனக்கு துல்லியமாக தெரியாது. கிராமத்தில் உள்ளவர்கள் 1980 காலகட்டம் என்று சொன்னார்கள். மேற்கூறிய சர்வே எண்ணை எப்போது பரிமாற்றிக்கொண்டார்கள் என்று ரமேஷிடம் கேட்டு நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் கிரையம் வாங்குவதற்கு முன்னர் 30 வருடத்திற்கு முன்னர் வில்லங்க சான்றிதழை வாங்கி பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. வாசாஆ14ல் சர்வே எண் 157/1 சம்பந்தப்பட்டதாகும். அந்த சொத்தும் சர்வே எண் 165/4ஏ-ல் உள்ள சொத்தும் பரிமாறிக் கொள்ளப்பட்டது. சர்வே எண் 157/1ல் உள்ள விஸ்தீரனம் 82 சென்ட் ஆகும். மேற்கூறிய இரு சர்வே எண்கள் பரிமாறிக் கொள்ளப்பட்ட விவரத்தை அ.வ.எண்.110/2020 வழக்கில் சொல்லவில்லை. ரமேஷ் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் ரமேஷ்-க்கு சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்விதம் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று கேட்டால் அவரின் மூதாதையர்கள் பரிமாறிக் கொண்டதால் பூர்வீகமாக கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ராஜகோபால் நாயுடுவிற்கு மாதவ நாயுடு ஒரே வாரிசு ஆவார். ராஜகோபால் நாயுடுவிற்கு பெண் குழந்தைகள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. அ.வ.எண்.110/2020 வழக்கில் ரமேஷின் தந்தை தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக கூறியிருக்கிறேன். சொத்து ராஜகோபால் நாயுடுவிற்கும், பின்னர் மாதவ நாயுடுவிற்கு கிடைத்து அவருக்கு பின்னர் ரமேஷ்க்கு கிடைத்ததததாக

அந்த வழக்கில் கூறியுள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. அதை பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் சென்றபோது 1 முதல் 3 பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் அவ்வழக்கை தாக்கல் செய்தேன். இடையூறு செய்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. போலீஸார் நீதிமன்றத்திற்கு போக சொல்லிவிட்டார்கள். அ.வ.எண்.110/2020 வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. இடைக்கால உறுத்துக்கட்டளை கோரியிருந்தேன். அம்மனுவில் பிரதிவாதிகள் எதிர்உறை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மகாராஜா என்பவர் தான் அவ்வழக்கில் எனக்காக ஆஜரானார். அவ்வழக்கில் அந்த வழக்கறிஞரை மாற்றிவிட்டு தற்போதை என் வழக்கறிஞரை நியமித்தேனா என்று எனக்கு தெரியாது. அ.வ.எண்.110/2020 வழக்கை தாக்கல் செய்ய நான் தான் விவரம் கூறினேன். என் மகனும் விவரம் கூறினார். நான் பி.காம் படித்திருக்கிறேன். நான் பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறேன். நான் ஸ்டீல் பேக்டரி வைத்திருக்கிறேன். அந்த தொழில்களை என் மகனும், நானும் பார்த்துக் கொள்கிறோம். பிரதிவாதிகள் எதற்காக தாவா சொத்து சம்பந்தமாக என்னுடன் பிரச்சனை செய்தார்கள் என்று கேட்டால் சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறி பிரச்சனை செய்தார்கள். அவர்களிடம் இருக்கும் ஆவணத்தை கேட்டேன். அவர்கள் காட்டவில்லை. அவ்வழக்கில் பிரதிவாதிகள் என்ன என்ன

ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.